# ஒழுங்கான சக்தி மற்றும் அணுகுவழி முன்னேற்றச் செயற்திட்டம் - 2014

ஒழுங்கான சக்தி மற்றும் அணுகுவழி முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 யூன் 17 ஆம் திகதிய 2518 ஆம் மற்றும் 2519 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் மற்றும் 0149- எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 11 ஆம் உறுப்புரையின் 2.09 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் நோக்கங்கள், அமுலாக்கல், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

ஒழுங்கான சக்தி மற்றும் அணுகுவழி முன்னேற்றச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, மின்வலு மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை, வரையறுத்த லங்கா மின்சார கம்பனி (தனியார்) செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவர்களாக உள்ளனர். செயற்திட்டத்தின் நோக்கங்களாக (i) வலுவான பரிமாற்று மற்றும் விநியோக வலையமைப்பு, மற்றும் பல்துறை வீதி ஒளியூட்டலின் கேள்வி வழி முகாமைத்துவம் (ii) சிறிய உயர்மின்வலு பொறிக்கான வலையமைப்பு நெரிசலை அகற்றல், மற்றும் (iii) கிழக்கு மாகாணத்தில் பரிமாற்ற வலையமைப்பை வலுப்படுத்தலும் தெரிவுசெய்யப்பட்ட மாகாணங்களில் சேவை இணைப்புக்களிற்காக கடன் ஆதரவு நிகழ்ச்சித்திட்டத்தை விரிவாக்கல் என்பவற்றின் ஊடாக இலங்கை மின்சார சபை மற்றும் வரையறுத்த லங்கா மின்சார கம்பனி (தனியார்) என்பவற்றின் பாதுகாப்பு மற்றும் சேவை வினைத்திறனை முன்னேற்றுவதால் மலிவானதும் நம்பகத்தன்மையுடையதுமான மின்சார வழங்கலை உணருதல் என்பன உள்ளன.

செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 20,274.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 188.2 மில்லியனானதுடன் அதில் ரூபா 17,689.2 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 164.2 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதனது செயற்பாடுகளை 2010 பெப்ரவரி 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 மே 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் காலம் 2518 ஆம் இலக்க கடனிற்காக 2015 நவம்பர் 30 வரையும் 2519 ஆம் இலக்க கடனிற்காக 2015 செப்தெம்பர் 30 வரையும் நீடிக்கப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கி 2015 மார்ச் 31 வரை மானியத்திற்கான முடிவுறுத்தல் திகதியை நீடித்திருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி

நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின்

(சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஊ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஓ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க

மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பொதுவான அம்சமாக, செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் செயற்திட்ட ஆதனங்களாக முறைப்படி பதியப்பட்டிருக்காததுடன் இதன்படி கணக்கீட்டு திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரர்கள் ஊடாக ரூபா 16.13 மில்லியன் கிரயத்தில் 2012 இல் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 02 மோட்டார் வாகனங்கள் மற்றும் இலங்கை மின்சாரசபையால் பயன்படுத்தப்பட்டவை செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்படுவதற்கு பதிலாக நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், 2012 இல் கொள்வனவு செய்யப்பட்ட 17 வேறு மோட்டார் வாகனங்கள் மற்றும் ரூபா 95.56 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தகாரர்கள் ஊடான முதல் என்பன ஒப்பந்தகாரர்களால் இலங்கை மின்சாரசபைக்கு அத்தகைய சொத்துக்களின் உரிமையாண்மை மாற்றப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 97.17 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மின் உபகரணங்கள் மற்றும் பொருட்கள் மற்றும் வரையறுத்த லங்கா மின்சாரக் கம்பனியின் (தனியார்) களஞ்சியத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாது இருந்தவை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நுகர்வு விடயங்களாக நடைபெறும் வேலைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. .

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

மீளாய்வாண்டின் போது பணவளிப்பு செய்யப்பட்ட ரூபா 2,342 மில்லியன் தொகையான கடன் பெறுகைகள் மற்றும் ரூபா 992,670 தொகையான மானியங்கள் மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டவை நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் போணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட

ரூபா 2,389 மில்லியன் தொகையான கடன் பெறுகைகள் மற்றும் ரூபா 448 மில்லியன் தொகையான மானியங்கள் என்பவற்றுடன் உடன்பட்டிருக்கவில்லை. வித்தியாசத்தை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

2015 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 22 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டின் போதான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 164.20 | 17,689.20 | 3,750.00 | 17 | 2,343.00 | 101 | 13,071.00 |
| இலங்கை அரசாங்கம் | 24.00 | 2,585.60 | 46.00 | - | - | - | - |
| இலங்கை மின்சார சபை | - | - | 426.00 | - | 218.00 | - | 1,451.00 |
| **மொத்தம்** | **188.20** | **20,274.80** | **4,222.00** | **17** | **2,561.00** | **101** | **14,522.00** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், சிவில் வேலைகளிற்கான ஒப்பந்தங்கள் தயார்படுத்தல் ஒப்பந்தங்களாக வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| **நவடிக்கை** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம்** |
| --- | --- |
| **மின்வலு வினைத்திறன் முன்னேற்றம்** | |
| **(அ) முறைமை கட்டுப்பாடு நவீனமயப்படுத்தல்**<br>**பொதி ஏ** | |
| லொட் 01- தேசிய முறைமை கட்டுப்பாட்டு நிலையத்தின் நிர்மாணம் | ஆரம்ப வடிவமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. |
| லொட் 02- தொடர்பால் முறைமை பொருத்துதல் | ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. |
| **(ஆ) பரிமாற்ற முறைமை வலுப்படுத்தல்** | |
| லொட் ஏ 01- கட்டுப்பாட்டு கட்டிட நிர்மாணம் | நிர்மாண வேலைகள் செயற்பாட்டில் உள்ளன. |
| லொட் ஏ 02- குறைநிரப்பு ஒப்பந்தங்கள் | ஆரம்ப மற்றும் பொறியியல் வேலைகள் தொடங்கப்பட்டிருந்தது. |
| லொட் ஏ 03- மின்மாற்றிக்கான அடித்தள நிர்மாணம் | நிர்மாண வேலைகள் செயற்பாட்டில் உள்ளன. |
| புத்தளம் மாஹோ மின்மாற்றி வரிசையின் வேலையின் நோக்கெல்லையின் மேம்பாடு | நிர்மாண வேலைகள் செயற்பாட்டில் உள்ளன. |
| **(இ) விநியோக உப நிலையங்களின் விரிவாக்கம்** | |
| கட்டுநாயக்க, நாவல, கிரிபத்கொடை, கொட்டிகாவத்தை மற்றும் ஹிக்கடுவையில் உப நிலையங்களின் இயலளவை விரிவாக்கல் | நோக்கெல்லை மாற்றங்கள் மற்றும் கேள்வி ஆவணங்கள் என்பவற்றிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுமதி பெறுவதிலுள்ள தாமதங்களால் வேலைகள் இன்னமும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஈ) மாநகர வீதி விளக்குகளிற்கான கேள்வி வழி முகாமைத்துவம்** | பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| **(உ) ஆலோசனை** | **ஆலோசனையாளர்கள் இது வரை தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.** |
| **குறைவானதற்கான அணுகுவழி** | |
| (அ) கிழக்கு மாகாணத்தில் மின்பரிமாற்ற முறைமையை வலுப்படுத்தல் | தேவைப்பட்ட உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) கிராம வீட்டு இணைப்புகள் | தொலைவிலுள்ள பகுதிகளில் வசிப்போருக்காக கடன்கள் 1,334 வழங்கப்பட்டிருந்தது. |

## 3.3 முகாமைத்துவ திறமையின்மை

-----------------------------------------------

இலங்கை மின்சார சபையால் கையாளப்பட்ட சகல வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்கான பொறுப்புடைய இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளரின் (செயற்திட்டங்கள்) ஆதிக்கத்தின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் வந்திருக்கவில்லை. அத்தகையவாறு, இலங்கை மின்சார சபைக்கு ஒதுக்கப்பட்ட 08 பகுதிகளின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த கண்காணிப்பு முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.